தட்சணாமூர்த்தி, திரு. ரங்கசாமி, செல்வி சுவாதி மற்றும் பாம்பு கடித்து உயிரிழந்த திருமதி செண்பகவள்ளி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த செல்வன் ராஜன் என்பவரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) சாலை விபத்தில் உயிரிழந்த திரு. மணிகண்டன் மற்றும் அவருடைய மனைவி திருமதி மீனாட்சி செல்வி, திரு. மணிகண்டன், திரு. மோகன், திரு. தம்பூட்டு என்கிற திருமுருகன், திரு. செல்வகுமார், செல்வன் பார்த்திபன், திரு. பழனிசாமி, திரு. பார்த்திபன், திரு. கருத்தப்பாண்டியன்; கடலில் மூழ்கி உயிரிழந்த திரு. வேணுகுமார், நாய் கடித்து உயிரிழந்த சிறுவன் தருண் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 1 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல் –தொடர்ச்சி

(ஐ) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழ் மொழியில் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராந்திய மொழிகளில் தீர்ப்புகள் வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தாய் தமிழ்நாட்டில், தமிழ் மொழி தொன்மையானது, உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி. ஆனால், நம்முடைய தேசத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை ஏன் தமிழ் மொழியில் தரக் கூடாது என்று நம்முடைய அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். தமிழ் மொழியிலும் தீர்ப்புகள் கிடைக்கப்பெறுவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நன்றி ஐயா, வணக்கம்.

(ஐ) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழ் மொழியில் வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, உச்ச நீதிமன்றத்திலிருந்து வெளிவருகின்ற தீர்ப்புகள் தமிழில் வெளிவருவதில்லை என்றும், அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் கோரினார்கள். இந்திய நாட்டின் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள், தீர்ப்புகள் வழங்கப்படுவது மட்டுமல்ல, அந்த வழக்குகளில் வழக்காடுபவர்களுக்கு புரிகின்ற வகையில், அவர்களுடைய தாய்மொழியில் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்ற அவரது கோரிக்கையை ஏற்று, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் அவர்கள், அந்தந்த பிராந்திய மொழிகளில் தீர்ப்புகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அவர் அதை அறிவிக்கின்றபோதே, முதற்கட்டமாக, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வழக்குகளில், அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற மொழிகளான தெலுங்கு, கன்னடம், மராத்தி, அசாமீஸ், ஓரியா, இந்தி ஆகிய 6 மொழிகளில் முதற்கட்டமாக அந்தத் தீர்ப்புகள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படும். படிப்படியாக அனைத்து மொழிகளிலும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதன் முதற்கட்டமாக நேற்று உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி மற்றும் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் அந்த ஆறு பிராந்திய மொழிகளிலே தீர்ப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்ததைப்போல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழிலே அந்தத் தீர்ப்புகள் மொழிபெயர்த்து வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கையை உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசர் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவிலே தமிழிலே தீர்ப்புகள் வெளிவருவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஒரு திட்டத்தைத் தொடங்கினால், அது சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எல்லா திட்டங்களையும் வழி வகுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்தவகையிலே, இந்தக் குழு பத்திரிகையாளர் நல வாரியத்திற்குத் தேவையான நிதியாதாரங்களை எவ்வாறு திரட்டுவது, என்னென்ன நலத் திட்ட உதவிகள் வழங்குவது என்பது குறித்து விரிவான அறிக்கை அளிக்கும். அந்த அறிக்கையின் அடிப்படையிலே பத்திரிகையாளர் நல வாரியம் அமைந்தால், அதை நடைமுறைப்படுத்துவது எளிதாக இருக்கும் என்பதால்தான் இந்தக் குழு அமைக்கப்படுகிறது. இக்குழு உடனடியாக அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, விரைவிலே பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என்ற தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை பெற்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஐ) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழ் மொழியில் வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த அவையில் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நம்முடைய தமிழ் மொழியில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் வரவேண்டும் என்ற கோரிக்கையை இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் உட்பட, அனைத்து உறுப்பினர்களும், ஆளுங்கட்சியின் சார்பாகவும், எதிர்க்கட்சிகளின் சார்பாகவும் அனைவருமே அந்தக் கோரிக்கையை வைத்தோம். இந்த அவையிலுள்ள அனைவரின்*

2019 ஜூலை 18] [திரு. சி.வி. சண்முகம்]

உணர்வுகளையும் கண்டிப்பாக உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவிலே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கு காலையிலும் சொன்னேன். ஒரு நல்ல செய்தியாக, இன்றைக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தமிழ் மொழியிலே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அது Internet*–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) சுறுசுறுப்பாகச் செயல்பட்டு, இந்தப் பணியில் வெற்றிகண்ட மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

—*தொடர்ச்சி*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், பத்திரிகையாளர்களின் நலனைப் பாதுகாக்கின்றவகையில்,*

பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு பத்திரிகையாளர்களின் வயிற்றில் பாலை வார்க்கின்ற அறிவிப்பு என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதல்வர் ஐயா எடப்பாடியார் அவர்களின் அரசு பத்திரிகையாளர்களின் பாதுகாவலன் என்பதை நிரூபிக்கின்றவகையில் மற்றொரு மைல் கல்லாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல் — *தொடர்ச்சி*

(ஐ) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழ் மொழியில் வழங்குதல் — *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக மொழிகளிலேயே மூத்த மொழி நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மொழி. இந்திய நாடு ஜனநாயகத்திலே மிகப் பெரிய உயர்ந்த ஜனநாயக நாடு. நம்முடைய நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் உச்ச நீதிமன்றம். இவ்வளவு மூத்த மொழி, இந்தியாவிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட, அதிகமானோர் பேசுகின்ற மொழி நம்முடைய தமிழ் மொழி. பெரும்பான்மையோர் பேசுகின்ற மொழி. நம்முடைய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டுமென்ற நம்முடைய கோரிக்கையை உச்ச நீதிமன்றம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, உச்ச நீதிமன்றம் மற்ற பிராந்திய மொழிகளுக்கெல்லாம் அந்த வாய்ப்பைத் தந்து, நேற்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அந்த மொழிகளையெல்லாம் பட்டியலிட்டு தீர்ப்பு, மொழிபெயர்க்கப்பட்டு பதிவேற்றப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கக்கூடியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டினுடைய எல்லா வகையான உரிமைகளுக்கும் தன்னுடைய உயிர் இருக்கும் வரை தொடர்ந்து போராடி, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளையும், சாதனைகளையும்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2019 ஜூலை 18] [திரு. உ. தனியரசு]

உரிமைகளையும் பெற்றுத் தந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. அம்மா அவர்களின் கனவை நனவாக்கியது மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசாகும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நம் அனைவரின் கோரிக்கைகளை பிரதிபலிக்கின்ற வகையில், இன்று காலையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றினை நான் கொண்டு வந்தேன். அந்தத் தீர்மானத்தின் மை காய்வதற்குள், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் நம்முடைய தமிழ் மொழியில் வந்துவிட்டன என்ற ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவைச் சார்பாகவும், உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் சார்பாகவும், சட்டமன்றப் பேரவையில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களின் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும் தெரிவித்து, எனது கருத்தை பதிவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் தனியரசு அவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்தது போன்று, நானும் அதே கோரிக்கையை வலியுறுத்தி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருந்தேன். இருவரில் ஒருவராக அவர் பேசினார். அவர் சுட்டிக் காட்டியதுபோன்று, அருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் கருணாஸ் அவர்களின் கருத்தை இணைத்து பேசுவதாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.*

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தச் செய்தி என்பது உலகமெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்களின் நெஞ்சங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் தமிழிலும் வரும் என்பது எதிர்பார்த்த ஒன்று. இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும், காதில் தேன் பாயக்கூடிய ஒரு இனிய செய்தியாகும். இதற்காக முயற்சி எடுத்த மாண்புமிகு அம்மா

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2019 ஜூலை 18

அவர்களின் அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறி, அமர்கிறேன். வாழ்த்துகள், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே! செயலினை மூச்சினை உனக்களித்தேனே' என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளை நிறைவேற்றுகின்ற வகையில், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை நடைபெறும் இந்த வேளையில், தமிழ் வளர்ச்சித் துறையில், தமிழுக்கு உறுதுணையாக இருக்கிற ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் அய்யா எடப்பாடியார் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மின்னலைவிட வேகமாக செயல்பட்ட மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழில் வழக்காடு மொழியாக வரும் என்று தெரிவித்த இந்த பொன்னான செய்தி நமக்கு மற்றொரு மைல் கல் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*